மாவட்ட ஆட்சித் தலைவரும் அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்பியிருக்கிறார். ஆகவே, உடனடியாக இந்தத் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

(ஓ) வேலூர் சட்டக் கல்லூரியில் 5 ஆண்டு சட்டப் படிப்பு தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.*

***திரு. என்.ஜி. பார்த்திபன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடியில் இயங்கிவரும் வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் இந்தக் கல்வியாண்டில் 5 ஆண்டு சட்டப் படிப்பு தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் ஏற்கெனவே கோரிக்கை மனு அளித்திருந்தேன். அதனை ஏற்று, இந்தக் கல்வியாண்டில் 5 ஆண்டு சட்டப் படிப்பு தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

(ஔ) நாகர்கோவில் தொகுதி, வலம்புரிவிளை உரக் கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மத்திய பகுதியில் வலம்புரிவிளை என்ற இடத்தில் உரக் கிடங்கு அமைந்திருக்கிறது. இந்த உரக் கிடங்கைச் சுற்றி பல இலட்சக்கணக்கான மக்கள் வசித்து வருகின்றனர். மழைக் காலங்களில் மிகப் பெரிய பாதிப்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகிறது. அதை மாற்று இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*